திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் காட்ரம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : **திருமதி. தா.கோவிந்தம்மாள்** தலைவர்
காட்ரம்பாக்கம் ஊராட்சி

ந.க. எண் 01 / 2024 - 25 **நாள் : 10.10.2024**

பொருள் :– மனைப்பிரிவு அனுமதி – காட்ரம்பாக்கம் ஊராட்சி – காட்ரம்பாக்கம் அ கிராமம், புல எண் 459/28, 483/5,6 மற்றும் காட்ரம்பாக்கம் ஆ கிராமம் புல எண்.451/2E – ல் 1743 ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நிர்வாக அனுமதி வழங்குதல் சார்ந்து.

பார்வை :– 1) மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இணக்குநர் / துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம் அவர்களின் ந.க. எண் ROC No.4MTAW8HY/2024/TCP நாள் **09/08/2024**

2) காட்ரம்பாக்கம் ஊராட்சியின் தீர்மான எண் **201**, நாள் **08/10/2024**

உத்திரவு :–

திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், காட்ரம்பாக்கம் ஊராட்சி மன்றம், காட்ரம்பாக்கம் – அ கிராமம் புல எண் 459/28, 483/5,6 மற்றும் காட்ரம்பாக்கம் ஆ கிராமம் புல எண்.451/2E – ல் 1743 சதுர மீட்டர் பரப்பளவில் **திரு.ராஜேந்திரன், மேடவாக்கம், சென்னை–600100** என்பவருக்கு சொந்தமான சிறுவர் பூங்கா மற்றும் சமுக கூடம் நிலத்தை மாற்றி குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க பார்வை 1-ல் கண்டுள்ள கடித குறிப்பின் மூலம் **"ம.வ./ந.ஊ.இ.எண் 89 /2024"** என எண்ணிட்டு அளித்துள்ள தொழில்நுட்ப அங்கீகாரத்தின்படியும், காட்ரம்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் **201**, நாள் **08/10/2024** ன்படியும், தங்களால் அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு **காட்ரம்பாக்கம் - அ கிராமம் புல எண்** 459/28, 483/5,6 மற்றும் **காட்ரம்பாக்கம் ஆ கிராமம் புல எண்**.451/2E – ல் 1743 சதுர மீட்டர் பரப்பளவில் **மனை எண்கள் (361 முதல் 374 வரை)** 14 மனைகள் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைத்துள்ள வரைபடத்தில் கண்டுள்ள விபரப்படியும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளுடன் ஊராட்சியில் நிர்வாக அனுமதி அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இணக்குநர் / துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் காஞ்சிபுரம் அவர்களின் ந.க. எண் ROC No.4MTAW8HY/2024/TCP நாள் 09/08/2024 இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
2) **தானப்பத்திரம் எண்** 8617/2024. **நாள்** 29.07.2024 காட்ரம்பாக்கம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள சாலை மற்றும் பொது உபயோக இடங்களை எக்காரணம் கொண்டும் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது.
3) தாங்களால் அளிக்கப்பட்டுள்ள சொத்திற்குரிய ஆவணங்கள் பிற்காலத்தில் தவறுதலாக அளிக்கப்பட்டது என்ற பட்சத்தில் இவ்வுத்திரவு தானாக இரத்தாகியதாகும். அதற்கு மனுதாரரே சட்டப்படி பொறுப்பாவார்.
4) இம்மனைப்பிரிவில் உள்ள மனைகளில் கட்டிடம் கட்டுவதற்கு முன்பாக இவ்வூராட்சியில் வரைபட அனுமதி பெறப்பட வேண்டும்.
5) இம்மனைப்பிரிவு இடத்தினை பிற்காலத்தில் அரசால் நில் ஆர்ஜிதம் செய்யும்பட்சத்தில் மனைதாரர் அதற்கு கட்டுப்பட்டவராவார்.
6) மனைப்பிரிவில் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.
7) மேற்கண்ட நிபந்தனைகள் மீறினால் தங்களுக்கு வழங்கிய மனைப்பிரிவு அங்கீகாரம் தானாகவே இரத்தாகிவிடும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு : வரைபடம்-2

பெறுநர் : **திரு.ராஜேந்திரன்,**
சந்தோஷா–வேதேஷா, பிளாட் எண்.20,21,22
மேடவாக்கம், சென்னை–600100

நகல் : உயர்திரு. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருப்பெரும்புதூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

கோவிந்தம்மாள்
தலைவர்
காட்ரம்பாக்கம் ஊராட்சி
திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்

தீர்மான நகல்

திருப்பெருமிழலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காமராஜபுரம் ஊராட்சியில் 8.10.2024 தேதியன்று சிறுகிடங்கு கிழமை முற்பகல் / பிற்பகல் 11.00 மணிக்கு தலைவர் / தனி அலுவலர் திருமதி D. கோமதிசுப்பிரமணியன் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக இடத்தில் நடைபெற்ற சாதாரண / அவசர / சிறப்பு கூட்டத்தின் தீர்மான நகல்

தலைவர் உள்பட கூட்டத்தில் ஆஜரான அங்கத்தினர்கள் எண்ணிக்கை }

பொருள்: 1 201	தீர்மானம் 201/2024-25

காமராஜபுரம் 'அ' கிராமம், சர்வேஎண் 451/2E-ல் ஏற்கனவே DTCP Approved NO: 1668/1992-ன்படி அரசு அனுமதி வென்ற அமைந்துள்ள இருவழிகடப்பு மனைபயன்பாட்டில் சுமார் 600.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட "குழந்தை நடப்பு" இருந்தை மாற்றி வேறு கணக்கும், மேலும், காமராஜபுரம் 'அ' கிராமம், சர்வே எண்கள் 459/2B, 483/5 மற்றும் 483/6-ல் ஏற்கனவே DTCP Approved NO: 1668/1992-ன் படி அரசு அனுமதி வென்ற அமைந்துள்ள "இருவழிகடப்பு" மனைபயன்பாட்டில் சுமார் 11430.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட "சிறுவர் பூங்கா" இருந்தை மாற்றி வேறு கணக்கும், இரு வழிகள் / பூங்கா (மற்றும்) மனைபட்ட நகர் அமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் தற்போது Approval NO SWP/D.DTCP/Kancheepuram Layout NO-89/2024-ன்படி அமைந்துள்ள தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பொது உபயோகம் மற்றும் திறந்தவெளி மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீடு

P.T.O

தீர்மான நகல்

..... ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த.....
ஊராட்சியில்..... தேதியன்று..... சிறமை முற்பகல் / பிற்பகல்
.....மணிக்கு தலைவர் / தனி அலுவலர் திரு.....
தலைமையில் ..... இடத்தில் நடைபெற்ற சாதாரண /
அவசர / சிறப்பு கூட்டத்தின் தீர்மான நகல்

தலைவர் உள்பட கூட்டத்தில் ஆஜரான அங்கத்தினர்கள் எண்ணிக்கை }

பொருள்	தீர்மானம்
இப்பீ அகியனைகனை தாபரும் — பாக்கம் ஊராபுகிழ்ந்து தானப பஞ்சாயத்து எண் : 8167 / 2024-ன்படி தானமாக அளிக்கப்பட்டும். மேற்றவற்றை மனை எண்கள் : 361 முதல் 374 வரை மேற்படி தொடர்புடைய பிரதான வரைபடத்தில் அமைந்துள்ளதை உள்ள மேற்படி மனைகளுக்கு அதன் அடிமையான் தாபரும் பாக்கம் ஊராட்சி பயன்பாட்டிற்கு கடத்தில் வைத்து இறுதி பிரதான் கொள்ளல்.	தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றி அளிக்கப்படுகிறது. —

உண்மை நகல்

கோவிந்தம்மாள்
தலைவர்
காட்டாம்பாக்கம் ஊராட்சி
திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்



நாள் : 10 : 10 : 2024

பெறுநர்,

எஸ்.பி.ராஜேந்திரன்,
மனை எண்கள்.20, 21,22
முதல் தெரு, பிரபுராஜா நகர்,
மேடவாக்கம்,
சென்னை–600100.

பொருள் : எண்.57, காட்ரம்பாக்கம் ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட காட்ரம்பாக்கம்–ஆ கிராமம், சர்வே எண். 451/2E–ல் உள்ள சமூக கூடம் இடத்தை மனைகளாகவும் மற்றும் காட்ரம்பாக்கம்–அ சர்வே எண்கள். 459/28, 483/5 மற்றும் 483/6–ல் உள்ள சிறுவர் பள்ளி இடத்தை மனைகளாகவும் மாற்றிட இறுதி ஒப்புதல் வழங்குவது சம்மந்தமாக.

ஐயா,

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், எண். 57, காட்ரம்பாக்கம் ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட காட்ரம்பாக்கம்–ஆ கிராமம், சர்வே எண். 451/2E–ல் ஏற்கனவே DTCP APPROVED NO.1668/1992–ன்படி அரசு அனுமதி பெற்று அமைந்துள்ள "வேங்கடபுரி" மனைப்பிரிவில் சுமார் 600.00 ச.மீ பரப்பளவு கொண்ட சமூக கூடம் இடத்தை மாற்றி மனைகளாகவும் மற்றும் காட்ரம்பாக்கம் அ கிராமம், சர்வே எண்கள். 459/28, 483/5 மற்றும் 483/6–ல் ஏற்கனவே DTCP Approved No.1668/1992–ன்படி, அரசு அனுமதி பெற்று அமைந்துள்ள "வேங்கடபுரி" மனைப்பிரிவில் சுமார் 1143.00 ச.மீ பரப்பளவு கொண்ட "சிறுவர் பள்ளி" இடத்தை மாற்றி மனைகளாகவும், உதவி இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களின் தற்போது APPROVAL NO : SWP/D.DTCP / KANCHEEPURAM – LAYOU NO. 89/2024–ன் படி அமைந்துள்ள தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தின்படி, பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீட்டு இடம் – ஆகியவைகளை காட்ரம்பாக்கம் ஊராட்சிக்கு, தானப்பத்திர எண் : 8617/2024–ன்படி தானமாக அளிக்கப்பட்டு, மற்றவைகளை மனை எண்கள். 361 முதல் 374 வரை மேற்படி தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் அமைந்துள்ளவாறு உள்ள மனைகளுக்கு காட்ரம்பாக்கம் ஊராட்சி சார்பாக இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இப்படிக்கு,

கோவிந்தம்மாள்
தலைவர்
காட்ரம்பாக்கம் ஊராட்சி
திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்